நாட்டின் கடன் சுமை அடுத்த தலைமுறை மீது திணிக்கப்படாது

மத்திய நிதியமைச்சர்

புது தில்லி, அக்.20: 'நிதிப் பற்றாக்குறை மேலாண்மையில் மத்திய அரசு மிகுந்த கவனமுடன் செயல்பட்டுவருகிறது;எனவே,நாட்டின் கடன் சுமை அடுத்த தலைமுறையினர் மீது கடத்தப்படாது' என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கூறினார்.

தில்லியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற கௌடில்ய பொருளாதார மாநாட்டில் பங்கேற்ற மத்திய நிதியமைச்சர் பேசியதாவது:

நாட்டின் குறு பொருளாதார நிலைத்தன்மை தொடர்பான விவகாரங்கள், நிதி மேலாண்மை தொடர்பான விவகாரங்களில் எடுக்கப்படும் ஒவ்வொரு முடிவையும் மிகுந்த கவனமுடன் மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. அடுத்த தலைமுறையினர் மீது என்ன மாதிரியான சுமையை விட்டுச் செல்லப் போகிறோம் என்பதிலும் மத்திய அரசு கவனமுடன் உள்ளது.

ஊதாரித்தனமாகச் செயல்படுவதும், அதனால் ஏற்படும் கடன் சுமையை வருங்கால தலைமுறையினர் மீது சுமத்துவதும் எளிதானது.

ஆனால், நாட்டின் கடன்கள் மீது மத்திய அரசு மிகுந்த கவனமுடன் உள்ளது. மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது, இந்தியாவின் கடன் சுமை மிக அதிகமல்ல. பிற வளர்ந்து வரும் நாடுகளின் கடன் சுமை தொடர்பான புள்ளி விவரங்கள், அதனை அவர்கள் எவ்வாறு சமாளிக்கின்றனர் என்பதையும் மத்திய அரசு கவனித்து வருகிறது.

மேலும், வருங்கால தலைமுறையினர் மீது நாட்டின் கடன் சுமையை திணித்துவிடக் கூடாது என்ற மிகுந்த பொறுப்புணர்வுடன், கடன் சுமை மேலாண்மை முயற்சிகளை வெற்றிகரமாக இந்தியா மேற்கொண்டு வருகிறது.

கரோனா பாதிப்பு காலங்களில், மக்களுக்கு நேரடியாக பணத்தை கொடுப்பதற்குப் பதிலாக, ஒவ்வொரு ரூபாய்க்கும் சிறந்த வருமானம் கிடைக்கும் வகையில் பொது உள்கட்டமைப்பை உருவாக்குவதில் பொதுமக்களின் வரிப் பணத்தை மத்திய அரசு செலவிட்டது. இத்தகைய மூலதனச் செலவினங்களில் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்தும் வகையில், அதனை எண்ம (டிஜிட்டல்) அணுகுமுறையில்செலவழிக்கவும் அரசு முடிவு செய்து, நடவடிக்கை மேற்கொண்டது. இதன் மூலம், ஒவ்வொரு பணமும் எங்கு செல்கிறது என்பதை மக்கள் பார்க்க முடியும். குடிமக்களுக்கு அதிகாரமளிக்க எண்ம மயமாக்கலைக் காட்டிலும் சக்திவாய்ந்த நடைமுறை வேறெதுவும் இல்லை.

இதற்கு மக்கள் நிதித் திட்ட (ஜன்-தன்) வங்கிக் கணக்குகளை உதாரணமாக கூறலாம். இந்தத் திட்டம் கடந்த 2014-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டபோது, இத்தகைய 'பூஜ்ஜியம்' இருப்பு (ஜீரோ பேலன்ஸ்) வங்கிக் கணக்குகளால் பொதுத் துறை வங்கிகளுக்கு கூடுதல் சுமை ஏற்படும் என்று கூறப்பட்டது. ஆனால், இன்றைக்கு மக்கள் நிதி திட்ட வங்கிக் கணக்குகளில் ஒட்டுமொத்தமாக ரூ.2 லட்சம் கோடி ரொக்கம் இருப்பு உள்ளது என்றார்.

உச்சநீதிமன்ற நீதிபதி எஸ்.ரவீந்திர பட் ஓய்வு

புது தில்லி, அக். 20: உச்சநீதிமன்ற நீதிபதி எஸ்.ரவீந்திர பட் வெள்ளிக்கிழமை பணி ஓய்வுபெற்றார்.

நீதித் துறைக்கு அவர் மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளதாக, நீதிபதி சஞ்சய் கிஷண் கௌல் புகழாரம் சூட்டினார்.

நீதிபதி எஸ்.ரவீந்திர பட்டுக்கு பிரிவுபசாரம் அளிக்கும் சம்பிரதாய அமர்வுக்கு தலைமை தாங்கிய நீதிபதி சஞ்சய் கிஷண் கௌல் மேலும் கூறியதாவது:

நீதிபதி ரவீந்திர பட் துல்லியமாகவும் அதேநேரம் ரத்தின சுருக்கமாகவும் தீர்ப்புகளை வழங்கியவர்; குறிப்பாக, அரசமைப்புச் சட்டம் சார்ந்த விவகாரங்களில் முக்கிய பங்காற்றியுள்ளார். இந்த நீதிமன்றத்துக்கும் அவர் ஏற்கெனவே பணியாற்றிய நீதிமன்றங்களுக்கும் மகத்தான பங்களிப்பை தந்தவர். அவருடனான எனது தொடர்பு, கடந்த 1979-ஆம் ஆண்டில் இருந்தே நீடித்து வருகிறது என்றார் கௌல்.

சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, உச்ச நீதிமன்ற வழக்குரைஞர்கள் சங்கத் தலைவர் ஆதிஷ் அகர்வாலா மற்றும் பல்வேறு வழக்குரைஞர்கள் நீதிபதி ரவீந்திர பட்டை பாராட்டிப் பேசினர்.

பணிக் காலத்தில் தன்னிடம் அரவணைப்பையும், நட்பையும் காட்டிய சக நீதிபதிகள், ஒத்துழைப்பு நல்கிய வழக்குரைஞர்கள் ஆகியோருக்கு நன்றி தெரிவிப்பதாக, ரவீந்திர பட் குறிப்பிட்டார்.

உச்ச நீதிமன்ற நீதிபதியாக கடந்த 2019, செப்டம்பர் 23-ஆம் தேதி பதவியேற்ற இவர், தனது 4 ஆண்டு பணிக் காலத்தில் பல்வேறு முக்கிய தீர்ப்புகளை வழங்கியவர்.

ஒரே பாலின திருமணத்துக்கு சட்ட அங்கீகாரம் கிடையாது என்று அண்மையில் தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வில் ரவீந்திர பட் இடம்பெற்றிருந்தார்.

இந்த வழக்கில் தனித்தனியாக 4 தீர்ப்புகள் எழுதப்பட்ட நிலையில், தனது மற்றும் நீதிபதி ஹிமா கோலி சார்பில் 89 பக்க தீர்ப்பை வழங்கியிருந்தார். தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், தனது தனி தீர்ப்பில் தெரிவித்திருந்த சில கருத்துகளுடன் ரவீந்திர பட் உடன்படவில்லை.

பொருளாதாரத்தில் பின் தங்கிய பிரிவினருக்கு அளிக்கப்பட்ட 10 சதவீத இடஒதுக்கீட்டை கடந்த ஆண்டு உறுதி செய்த உச்ச நீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வில் இவர் இடம் பெற்றிருந்தார்.

கடந்த 1958, அக்டோபர் 21-இல் மைசூரில் பிறந்தவரான ரவீந்திர பட், தில்லி பல்கலைக்கழகத்தில் கடந்த 1982-இல் சட்டப் படிப்பு முடித்தார். பின்னர், தில்லி பார் கவுன்சிலில் பதிவு செய்த அவர், தில்லி உயர் நீதிமன்றத்தில் கடந்த 2004-இல் கூடுதல் நீதிபதியாகவும், 2006-இல் நிரந்தர நீதிபதியாகவும் நியமிக்கப்பட்டார். கடந்த 2019, மே மாதம் ராஜஸ்தான் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக அவர் பதவி உயர்வு பெற்றார்.

ராஜஸ்தானில் பாஜகதான் பிளவுபட்டுள்ளது: பிரியங்கா

ராஜஸ்தான் மாநிலம் சிக்ராயில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பங்கேற்ற பிரியங்கா காந்தி, முதல்வர் அசோக் கெலாட்.

ஜெய்பூர், அக். 20: 'பிரதமர் மோடியின் ஆணவத்தால், ராஜஸ்தானில் பாஜகதான் பிளவுபட்டுள்ளது' என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி கூறினார்.

ராஜஸ்தானில் அடுத்த மாதம் பேரவைத் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், அங்குள்ள தௌசா மாவட்டத்தின் சிக்ராய் பகுதியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற காங்கிரஸ் பொதுக் கூட்டத்தில் பிரியங்கா காந்தி பங்கேற்றார்.

ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட், முன்னாள் துணை முதல்வர் சச்சின் பைலட் ஆகியோர் ஒரே மேடையில் இக்கூட்டத்தில் பங்கேற்றனர். இதில், பிரியங்கா காந்தி பேசியதாவது:

ராஜஸ்தானில் காங்கிரஸ் ஒற்றுமையாகவே உள்ளது. நாங்கள் அனைவரும் இங்கு ஒன்றாக அமர்ந்துள்ளோம். ஆனால், பிரதமர் மோடியின் ஆணவத்தால், மாநில பாஜக பிளவுபட்டுள்ளது. அங்கு ஒற்றுமைக்கான எந்த அடையாளமும் இல்லை.

ஆட்சி அதிகாரத்தில் ஒட்டிக் கொண்டிருப்பது மட்டுமே பாஜகவின் ஒரே நோக்கம். மக்கள் நலன் குறித்து எந்த அக்கறையும் கிடையாது. ஏழை மக்களின் பையில் இருந்து பணத்தை எடுத்து, பெரும் தொழிலதிபர்களிடம் அளிப்பது தான் அவர்களின் கொள்கை.

தேர்தல்கள் வந்துவிட்டால், மதம், ஜாதி குறித்து பாஜக தலைவர்கள் பேசத் தொடங்கிவிடுவர். அது ஏன் என மக்கள் கேள்வியெழுப்ப வேண்டும் என்றார் பிரியங்கா காந்தி.

மத்தியில் காங்கிரஸ் ஆட்சி அமைத்தால் நாடு முழுவதும் ஜாதிவாரி கணக்கெடுப்பு

ராகுல் வாக்குறுதி

தெலங்கானா மாநிலம் ஜக்டியாலில் உள்ள வழியோர சிற்றுண்டிக் கடையில் தோசை சுட்ட ராகுல் காந்தி.

ஜக்டியால், அக். 20: மத்தியில் காங்கிரஸ் ஆட்சி அமைத்தால் நாடு முழுவதும் ஜாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி தெரிவித்தார்.

தெலங்கானாவில் சட்டப் பேரவைத் தேர்தல் பிரசாரம் மேற்கொண்டுள்ள ராகுல் காந்தி, பல்வேறு பொதுக்கூட்டங்கள், சாலையோர பிரசாரக் கூட்டங்களில் பங்கேற்று காங்கிரஸுக்கு ஆதரவு திரட்டி வருகிறார். தெலங்கானா பிரசாரத்தின் 3-ஆவது நாளான வெள்ளிக்கிழமை மாநிலத்தின் வடபகுதியில் உள்ள ஜக்டியால் மாவட்டத்தில் பிரசாரம் மேற்கொண்ட ராகுல் காந்தி பேசியதாவது:

தெலங்கானாவில் விவசாயிகள் விளைவிக்கும் அனைத்துப் பொருள்களுக்கும் இப்போது அளிக்கப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலையைவிட கூடுதலாக ரூ.500 அதிகம் வழங்கப்படும்.

தெலங்கானாவில் காங்கிரஸ் ஆட்சி அமைத்தவுடன் ஜாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று ஏற்கெனவே தெரிவித்துள்ளேன். அடுத்த ஆண்டு நடைபெறும் மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்று மத்தியிலும் ஆட்சி அமைக்கும். அப்போது நாடு முழுவதும் ஜாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்படும்.

முன்பு காங்கிரஸ் கூட்டணி மத்தியில் ஆட்சியில் இருந்த போது, ஜாதிவாரி மக்கள்தொகைக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. ஆனால், இப்போது அதை வெளியிட பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மறுத்து வருகிறது.

தெலங்கானாவில் பாஜக, பாரத ராஷ்டிர சமிதி, அகில இந்திய மஜ்லிஸ் கட்சி ஆகியவை ரகசியக் கூட்டணி வைத்துள்ளன. நாடாளுமன்றத்தில் பல்வேறு மசோதாக்களை நிறைவேற்ற பாஜகவுக்கு முதல்வர் சந்திரசேகர் ராவின் பாரத ராஷ்டிர சமிதி கட்சி உதவியுள்ளது.

நாட்டின் முதல் பிரதமர் ஜவாஹர்லால் நேரு, இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி என அனைவருக்குமே தெலங்கானாவுடன் உணர்வுபூர்வமான தொடர்பு உண்டு.

தெலங்கானாவில் நடைபெறவுள்ள சட்டப் பேரவைத் தேர்தல் சாமானிய மக்களுக்கும், மக்கள் பணத்தை கொள்ளையடிக்கும் பணக்காரர்களுக்கும் இடையிலான போட்டி என்பதை நினைவில்கொண்டு வாக்களிக்க வேண்டும் என்றார்.

பிரசாரத்தின்போது சாலையோர உணவகத்தில் ராகுல் காந்தி தோசை சுட்டு மற்றவர்களுக்கு வழங்கினார். அங்கிருந்த சிறார்களுக்கு இனிப்புகளை வழங்கினார்.

'காங்கிரஸில் சேர காத்திருந்த பாஜக தலைவர்கள்'

நிஜாமாபாத் பொதுக் கூட்டத்தில் பேசிய ராகுல், 'இங்கு பாரத ராஷ்டிர சமதிக்கும் காங்கிரஸுக்கும் இடையேதான் நேரடிப் போட்டி உள்ளது. ஆனால், பாஜக இங்கு சாதனை படைக்க இருக்கும் கட்சிபோல பிரசாரம் செய்து வருகிறது. இங்குள்ள பாஜக தலைவர்கள் திரைப்பட நட்சத்திரங்கள் போல உலா வருவார்கள். அவர்கள் தங்கள் காரில் இருந்துகூட கீழே இறங்காமல் சுற்றுவார்கள்.

அப்படிப்பட்ட பாஜக தலைவர்கள் பலர், காங்கிரஸில் சேர வரிசை கட்டி காத்திருந்தனர். ஆனால், காங்கிரஸ் அவர்களை நிராகரித்துவிட்டது' என்றார்.

பெண் தலைவருக்கு துன்புறுத்தல் புகார்: இளைஞர் காங்கிரஸ் தலைவருக்கு முன்ஜாமீன்

புது தில்லி, அக்.20: இளைஞர் காங்கிரஸ் தலைவர் பி.வி. ஸ்ரீநிவாஸ் மீது அஸ்ஸாம் முன்னாள் இளைஞர் காங்கிரஸ் பெண் தலைவர் அளித்த துன்புறுத்தல் புகார் தொடர்பான வழக்கில் உச்சநீதிமன்றம் முன்ஜாமீன் வழங்கியது.

இந்த விவகாரத்தில் குவாஹாட்டி உயர்நீதிமன்றம் பி.வி. ஸ்ரீநிவாஸுக்கு முன் ஜாமீன் வழங்க மறுத்தது. இதை எதிர்த்து அவர் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் பி.ஆர். கவாய், அரவிந்த் குமார், பி.கே. மிஸ்ரா ஆகியோர் அடங்கிய அமர்வு, 'இந்த வழக்கில் போலீஸாரின் விசாரணைக்கு ஸ்ரீநிவாஸ் முழு ஒத்துழைப்பு அளித்து வருவதால் அவருக்கு முன்ஜாமீன் வழங்கப்படுகிறது' என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

ராய்பூரில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டின்போது, ஸ்ரீநிவாஸ் தன்னை தள்ளிவிட்டு, அவதூறான வார்த்தைகளில் திட்டி துன்புறுத்தினார் என்றும் அதற்கு முன்பு 6 மாதங்களாக தன்னிடம் பாலியல் ரீதியில் கருத்துகளைத் தெரிவித்தார் என்றும் அஸ்ஸாம் இளைஞர் காங்கிரஸ் பெண் தலைவர் புகார் அளித்தார்.

இந்த விவகாரத்தில் கட்சி விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாக அந்த பெண் தலைவரை 6 ஆண்டுகள் அடிப்படை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கி காங்கிரஸ் கட்சி நடவடிக்கை எடுத்தது.

நிதாரி வழக்கு: சிறையில் இருந்து மொனீந்தர் சிங் பாந்தர் விடுதலை

கொலை வழக்கில் விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து கிரேட்டர் நொய்டா சிறையிலிருந்து வெள்ளிக்கிழமை விடுவிக்கப்பட்ட மொனீந்தர் சிங்.

நொய்டா, அக். 20: நிதாரி தொடர் கொலை வழக்கில் அலாகாபாத் உயர்நீதிமன்றத்தால் சில தினங்களுக்கு முன் விடுவிக்கப்பட்ட தொழிலதிபர் மொனீந்தர் சிங் பாந்தர், உத்தர பிரதேச மாநிலம், கிரேட்டர் நொய்டா சிறையில் இருந்து வெள்ளிக்கிழமை விடுதலையானார்.

நாட்டையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கிய நிதாரி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மொனீந்தர் சிங் பாந்தர், அவரது வீட்டுப் பணியாளர் சுரேந்திர கோலி ஆகிய இருவரையும் போதிய ஆதாரம் இல்லை எனக் கூறி அலாகாபாத் உயர் நீதிமன்றம் கடந்த திங்கள்கிழமை விடுவித்தது.

இதையடுத்து, கிரேட்டர் நொய்டாவின் லக்சர் சிறையில் இருந்து வெள்ளிக்கிழமை பிற்பகலில் விடுதலையான மொனீந்தர் சிங், யாரிடமும் எதுவும் பேசாமல் காரில் ஏறி சென்றுவிட்டார். காஜியாபாதின் தாஸ்னா சிறையிலுள்ள கோலி, மற்றொரு வழக்கில் ஆயுள் சிறை தண்டனை அனுபவித்து வருகிறார்.

நொய்டாவின் நிதாரி பகுதியில் பாந்தரின் வீட்டுக்கு பின்புறமுள்ள கழிவுநீர் கால்வாயில் கடந்த 2006, டிசம்பரில் பல குழந்தைகளின் எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டன.

பின்னர், வீட்டைச் சுற்றியுள்ள பல்வேறு கழிவுநீர் கால்வாய்களில் நடத்தப்பட்ட சோதனையில் ஏராளமான எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன. இவை, அப்பகுதியில் காணாமல் போன ஏழைக் குழந்தைகள், இளம்பெண்களின் எலும்புக் கூடுகள் என்பது கண்டறியப்பட்டது.

இந்த இளம்பெண்கள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு, கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது.

நாட்டையே உலுக்கிய இக்கொலைகள் தொடர்பாக பாந்தர், அவரது வீட்டுப் பணியாளர் கோலி ஆகியோர் மீது பாலியல் வன்கொடுமை, கொலை குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. வழக்கின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு விசாரணை சிபிஐ வசம் ஒப்படைக்கப்பட்டது. கோலி மீது 19 வழக்குகளும், பாந்தர் மீது 6 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன.

தன் மீதான 6 வழக்குகளில், 4-இல் பாந்தர் ஏற்கெனவே விடுவிக்கப்பட்டிருந்தார். கடந்த திங்கள்கிழமையன்று, மேலும் இரு வழக்குகளில் அவர் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, சிறையில் இருந்து விடுதலையாகியுள்ளார்.

'ம.பி. தேர்தலில் பாஜகவுக்கு ஆதரவாக செயல்படும் அகிலேஷ் யாதவ்'

காங்கிரஸ் குற்றச்சாட்டு

வாரணாசி, அக். 20: மத்திய பிரதேச தேர்தலில் சமாஜவாதி கட்சி வேட்பாளர்களை நிறுத்தியதன் மூலம் பாஜகவுக்கு ஆதரவாக அகிலேஷ் யாதவ் செயல்படுவதாக காங்கிரஸ் குற்றம்சாட்டியுள்ளது.

இந்தியா கூட்டணியில் உள்ள காங்கிரஸும் சமாஜவாதியும் மத்திய பிரதேச சட்டப் பேரவைத் தேர்தலில் தனித்தனியாக களமிறங்கியுள்ளன. காங்கிரஸ் தங்களுக்கு தொகுதி ஒதுக்காதது குறித்துப் பேசிய அகிலேஷ் யாதவ், 'மத்திய பிரதேசத்தில் சமாஜவாதிக்கு காங்கிரஸ் கட்சி தொகுதி ஒதுக்கீடு செய்யவில்லை. இதேபோன்று உத்தர பிரதேசத்தில் தேர்தல் வரும்போது காங்கிரஸுக்கு நாங்கள் தொகுதி ஒதுக்க மாட்டோம்' என்றார்.

இந்நிலையில் வாரணாசியில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்த உத்தர பிரதேச காங்கிரஸ் தலைவர் அஜய் ராய் கூறுகையில், 'காங்கிரஸ் வேட்பாளர்களை அறிவிக்கும் முன்பே, மத்திய பிரதேச தேர்தலுக்கான வேட்பாளர்களை அகிலேஷ் யாதவ் அறிவித்துவிட்டார். இவ்வாறு நடந்து கொண்ட அவர், தங்களுக்கு காங்கிரஸ் தொகுதி ஒதுக்கவில்லை என்று குற்றம்சாட்ட முடியாது.

மேலும், சமாஜவாதி சார்பில் வேட்பாளர்களை நிறுத்துவதன் மூலம் பாஜகவுக்கு ஆதரவாக அகிலேஷ் யாதவ் செயல்பட்டுள்ளார். ஏனெனில், பாஜகவை எதிர்த்து பல வேட்பாளர்கள் நிற்பது வாக்குகளைச் சிதறடிக்கும். இது பாஜகவுக்குதான் சாதகமாக அமையும்' என்றார்.

மத்திய பிரதேசத்தில் சமாஜவாதிக்கு 6 தொகுதிகளை ஒதுக்க காங்கிரஸ் முன்வந்ததாகவும், அதனை ஏற்காமல் அகிலேஷ் யாதவ் தனியாக வேட்பாளர்களை அறிவித்ததாகவும் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாஜக ஆட்சியில் உள்ள மத்திய பிரதேசத்தில் அக்கட்சிக்கும், காங்கிரஸுக்கும் நேரடிப் போட்டி உள்ளது. மத்திய பிரதேசத்தில் நவம்பர் 17-ஆம் தேதி தேர்தல் நடைபெறவுள்ளது.

DhanlaxmiBank established 1927

தனலக்ஷ்மி பேங்க் லிட்.
எண்.269, தம்பு செட்டித் தெரு
ஜார்ஜ் டவுன், சென்னை - 600 001
போன் : 044-25211412

பிராந்திய அலுவலகம் : சென்னை கார்ப்பொரேட் அலுவலகம் : திருச்சூர்

அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை - IV-A (காண்க நிபந்தனையின் விதி 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், கடன் வழங்கிய வங்கியால் பிணையத்திற்குள்ளான/ஈடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, **தனலக்ஷ்மி வங்கி**யின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆக்கபூர்வ/கொள்நிலைசுவாதீனம்செய்துகொள்ளப்பட்டது,கீழேகுறிப்பிடப்பட்டுள்ள**கடன்தாரர்கள்: 1) M/s.அஜீஸ் ஸ்டீல் கார்ப்பொரேஷன்,** பங்குதாரர் நிறுவனம், பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள் திரு. S.A.தமீம் அன்சாரி, திரு. S.A. சதக்கத்துல்லா மற்றும் திரு. R.ஜாகீர் உசேன், பதிவு அலுவலகம் : எண்.67, செம்புதாஸ் தெரு, ஜோன்ஸ் லேன், பிராட்வே, சென்னை – 600 001. **2) மேலும் :** M/s. அஜீஸ் ஸ்டீல் கார்ப்பொரேஷன், எண்.247, ஸ்டீல் சிட்டி, பூந்தமல்லி புற வழிச் சாலை, பூந்தமல்லி, சென்னை – 600 056, **3. திரு. S.A.தமீம் அன்சாரி, பங்குதாரர்:** M/s. அஜீஸ் ஸ்டீல் கார்ப்பொரேஷன், எண்.67, செம்புதாஸ் தெரு, ஜோன்ஸ் லேன், பிராட்வே, சென்னை – 600 001, **4. திரு. S.A.தமீம் அன்சாரி, பங்குதாரர் :** M/s. அஜீஸ் ஸ்டீல் கார்ப்பொரேஷன், எண்.247, ஸ்டீல் சிட்டி, பூந்தமல்லி புற வழிச் சாலை, பூந்தமல்லி, சென்னை – 600 056, **5. திரு. R.ஜாகீர் உசேன், பங்குதாரர் :** M/s. அஜீஸ் ஸ்டீல் கார்ப்பொரேஷன், எண்.67, செம்புதாஸ் தெரு, ஜோன்ஸ் லேன், பிராட்வே, சென்னை – 600 001, **6. திரு. R.ஜாகீர் உசேன், பங்குதாரர் :** M/s. அஜீஸ் ஸ்டீல் கார்ப்பொரேஷன், எண்.247, ஸ்டீல் சிட்டி, பூந்தமல்லி புற வழிச் சாலை, பூந்தமல்லி, சென்னை – 600056, **7. திரு. S.A.சதக்கத்துல்லா, பங்குதாரர் :** M/s. அஜீஸ் ஸ்டீல் கார்ப்பொரேஷன், எண்.67, செம்புதாஸ் தெரு, ஜோன்ஸ் லேன், பிராட்வே, சென்னை – 600 001, **8. திரு. S.A.சதக்கத்துல்லா, பங்குதாரர் :** M/s. அஜீஸ் ஸ்டீல் கார்ப்பொரேஷன், எண்.247, ஸ்டீல் சிட்டி, பூந்தமல்லி புற வழிச் சாலை, பூந்தமல்லி, சென்னை – 600 056, **9. திரு. S.A.தமீம் அன்சாரி, அடமானதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர், பங்குதாரர் :** M/s. அஜீஸ் ஸ்டீல் கார்ப்பொரேஷன், பழைய எண்.40, புதிய எண்.70, திருவேங்கடம் தெரு, புதுப்பேட்டை, சென்னை – 600 002. **10. திருமதி. ரசூல் பீவி – உத்தரவாதமளித்தவர்,** பழைய எண்.40, புதிய எண்.70, திருவேங்கடம் தெரு, புதுப்பேட்டை, சென்னை – 600 002. **11. திரு. R.ஜாகீர் உசேன், அடமானதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர், பங்குதாரர் :** M/s. அஜீஸ் ஸ்டீல் கார்ப்பொரேஷன், பழைய எண்.40, புதிய எண்.70, திருவேங்கடம் தெரு, புதுப்பேட்டை, சென்னை – 600 002. **12. திருமதி. சையது அலி பாத்திமா**, பழைய எண்.40, புதிய எண்.70, திருவேங்கடம் தெரு, புதுப்பேட்டை, சென்னை – 600 002. **13. திரு. S.A.சதக்கத்துல்லா, அடமானதாரர் மற்றும் உத்தரவாதமளித்தவர், பங்குதாரர் :** M/s. அஜீஸ் ஸ்டீல் கார்ப்பொரேஷன், பழைய எண்.40, புதிய எண்.70, திருவேங்கடம் தெரு, புதுப்பேட்டை, சென்னை – 600 002 ஆகியோரிடமிருந்து கடன் வழங்கிய வங்கிக்கு வரவேண்டிய **30.09.2023 தேதி வரையான தொகை ரூ.9,86,76,977.28 (ரூபாய் ஒன்பது கோடியே எண்பத்து ஆறு லட்சத்து எழுபத்து ஆறாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து ஏழு மற்றும் பைசா இருபத்து எட்டு மட்டும்)** மேற்படி தனலக்ஷ்மி வங்கி லிட்., சென்னை ஜார்ஜ் டவுன் கிளைக்கு வரவேண்டிய நிலுவைகளுக்காக **'எங்குள்ளதோ உள்ளபடி' 'என்ன உள்ளதோ உள்ளபடி அடிப்படையில்'** மற்றும் **'என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடி அடிப்படையில்'** என்கிற நிலையில் **24.11.2023, வெள்ளிக்கிழமை** அன்று விற்பனை செய்யப்படுகிறது.

நிர்ணயிக்கப்பட்ட விலை : இனம்–1 க்கு : ரூ.3,60,41,000/– (ரூபாய் மூன்று கோடியே அறுபது லட்சத்து நாற்பத்து ஒராயிரம் மட்டும்); **இனம்–2 க்கு : ரூ.94,03,000/–** (ரூபாய் தொண்ணூற்று நான்கு லட்சத்து மூன்றாயிரம் மட்டும்); **இனம்–3 முதல் 8 வரையானது ஒன்றாக : ரூ.4,32,00,000/–** (ரூபாய் நான்கு கோடியே முப்பத்து இரண்டு லட்சம் மட்டும்).

முன்வைப்புத் தொகை (EMD) : இனம்–1 க்கு : ரூ.36,04,100/– (ரூபாய் முப்பத்து ஆறு லட்சத்து நான்காயிரத்து நூறு மட்டும்); **இனம்–2 க்கு : ரூ.9,40,300/–** (ரூபாய் ஒன்பது லட்சத்து நாற்பதாயிரத்து முன்னூறு மட்டும்); **இனம்–3 முதல் 8 வரையானது ஒன்றாக : ரூ.43,20,000/–** (ரூபாய் நாற்பத்து மூன்று லட்சத்து இருபதாயிரம் மட்டும்).

சொத்தின் விவரம்

இனம்–1 : திருவேங்கட நாய்க்கன் தெரு, கதவு எண்.68 (70), பழைய கதவு எண்.40, சென்னை–600 002, புதுப்பேட்டை, முதல் தெரு, தண்டையார்பேட்டை தாலூகா, வேப்பேரி கிராமம், பழைய சர்வே எண்.576, மறு சர்வே எண்.1412, ஆட்சியர் சான்றிதழ் எண்.701, பிளாக் எண்.47, பட்டா C.A.எண்.4991/80–81, தேதி 09.12.1980, இதிலுள்ள S.A.தமீம் அன்சாரி, S.A. சதக்கத்துல்லா மற்றும் S.A. பெரோஸ் கான் ஆகியோர் பெயரிலான நிலம் மற்றும் கட்டிடம் கொண்ட சொத்து. எல்லைகள் விபரம் : வடக்கே – பிரசன்டேஷன் கான்வென்ட், தெற்கே – திருவேங்கட நாய்க்கன் தெரு, கிழக்கே – கதவு எண்.41, திருமதி. கனகராஜம்மாளுக்குச் சொந்தமான சொத்து, மேற்கே – கதவு எண்.39, திருமதி. ராஜலட்சுமி அம்மாளுக்குச் சொந்தமான சொத்து. மொத்தம் 1743 சதுரடி அங்கு கட்டப்பட்டுள்ள 1600 சதுரடி தரைத் தளம், 1200 சதுரடி முதல் தளம் மற்றும் 200 சதுரடி இரண்டாம் தளம் கொண்ட கட்டிடத்துடன். மத்திய சென்னை பதிவு மாவட்டம், பெரியமேடு சார் பதிவு மாவட்டத்தினுள் அமைந்துள்ள சொத்து.

இனம்–2 : திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தாலூகா, சர்வே எண்.282 பகுதி, பட்டாவின்படி உட்பிரிவு சர்வே எண்.282/1 C, பாரிவாக்கம் கிராமம், களம் எண்.247, இதிலமைந்த R.ஜாகீர் உசேன் பெயரிலான நிலம் மற்றும் கட்டிடம் (குடோன்) அடங்கிய 1800 சதுரடி (பட்டாவின்படி 1614 சதுரடி) அதனோடான 2370 சதுரடியிலமைந்த கட்டிடம். எல்லைகள் விபரம் : வடக்கே – களம் எண்.248 மற்றும் 249, தெற்கே – களம் எண்.246, கிழக்கே – 40 அடி ரோடு, மேற்கே – சர்வே எண்.269 காலி நிலம்.

இனம்–3 : திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தாலூகா, சர்வே எண்.268, 270 மற்றும் 271, பாரிவாக்கம் கிராமம், களம் எண்.261, இதிலமைந்த S.A.சதக்கத்துல்லாவின் பெயரிலான 1800 சதுரடி காலி நிலம். எல்லைகள் விபரம் : வடக்கே – 30 அடி ரோடு, தெற்கே –களம் எண்.266, கிழக்கே – களம் எண்.260, மேற்கே – களம் எண்.262.

இனம்–4 : திருவள்ளூர் மாவட்டம், பூந்தமல்லி தாலூகா, சர்வே எண்.268, பாரிவாக்கம் கிராமம், களம் எண்.262, இதிலமைந்த S.A.தமீம் அன்சாரியின் பெயரிலான 1800 சதுரடி காலி நிலம். எல்லைகள் விபரம் : வடக்கே – 30 அடி ரோட